**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.CC- 291/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | கண்ணகி | Prosecution | LW–1 as PW –1 |
| Fathers Name | குஞ்சு | Defence | |
| Village | மணிகிராமம் | Taluk | |
| Calling | | Age | 41 /2025 |

**Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day**

19.06.2025. **எதிரி ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து தையல் வேலை செய்து வருகிறேன். எனக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது. குழந்தையின் பெயர் ஜெசிகா ஆகும். அந்த குழந்தைக்கு தற்போது ஒன்றரை வயது ஆகின்றது. ஆஜர் எதரிதான் எனது குழந்தையின் அப்பா ஆவார். கடந்த 2020ம் ஆண்டு , மேலையூரில் உள்ள பாலா என்பவரது தையல் கடையில் டெய்லராக பணிபுரிந்து வந்தேன். ஆஜர் எதிரி என்னுடன் அதே டைலர் கடையில் வேலை செய்து வந்தார். வேலைக்கு சேர்ந்த சில நாட்களிலே அவர் என்னிடம் பேசி பழக ஆரம்பித்தார். நாங்கள் இரண்டு பேரும் திருமணம் செய்து கொள்வதற்கு முடிவெடுத்து எதிரியின் குடும்பத்தாரிடம் எங்கள் முடிவை தெரிவித்தோம். அவர்களும் அதற்கு சம்மதம் தெரிவித்தார்கள். அதன் பின் நான் சென்னையில் உள்ள எக்ஸ்போர்ட் கம்பெனியில் டைலராக வேலை செய்து வந்தேன். சென்னையில் உள்ள நாராயணபுரம் என்ற ஊரில் தனியாக வீடு எடுத்து தங்கி வந்தேன். எதிரியும் தாம்பரத்தில் வேலை செய்து வந்ததால் என்னைப் பார்ப்பதற்கு அடிக்கடி எனது வீட்டிற்கு வருவார். அது போல் ஒரு நாள் நாங்கள் இருவரும் எங்கள் வீட்டில் தனியாக இருந்தபோது எதிரி என்னிடம் நான் தான் உன்னை திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று ஆசை வார்த்தை கூறி என்னுடன் உடலுறவு கொண்டார். அதில் நான் கர்ப்பமாகி விட்டேன் .

2. அதன்பின் சில நாட்கள் எனது தொலைபேசி அழைப்புகளை தவிர்த்து வந்தார். கடந்த2023 ஆம் வருடம் ஜனவரி மாதம் பொங்கல் விடுமுறைக்கு நான் நேராக எதிரியின் வீட்டிற்கு சென்று கர்ப்பமான விவரத்தை அவரிடமும் அவரின் குடும்பத்தாரிடமும் கூறினேன். அதற்கு எதிரி இந்த குழந்தை என்னுடையது இல்லை ,கர்ப்பத்திற்கு நான் காரணம் இல்லை என்று என்னை குச்சிகாரி தேவிடியா என்று தகாத வார்த்தைகளால் திட்டினார். நான் கர்ப்பமாக இருந்த விஷயத்தை எனது அக்காவிடம் தெரிவித்து எனது அக்கா எதிரியிடம் என்னை திருமணம் செய்து கொள்ளுமாறு கேட்டதற்கு எனது அக்காவை தரை குறைவாக திட்டி கொள்ளாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்.

3. அதைத்தொடர்ந்து கடந்த 07.8.2023 ஆம் தேதி பகல் 2 மணி அளவில் நான் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு சென்று எதிரியின் மீது புகார் கொடுத்தேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் அந்த புகார் மனு அ.ச.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.CC- 291/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ஜெயந்தி | Prosecution | LW-2 as PW -2 |
| Husband Name | சம்பந்தம் | Defence | |
| Village | மணிகிராமம் | Taluk | |
| Calling | | Age | 49/2025 |

**Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day**
19.06.2025. **எதிரி ஆஜர்**
**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**
**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய தங்கை ஆவார். கடந்த 2020 ஆம் ஆண்டு அ.சா.1 க்கும், எதிரிக்கும் பழக்கம் ஏற்பட்டது. அவர்களுக்குள் ஏற்பட்ட பழக்கத்தினால் கடந்த 2022 ஆம் ஆண்டு அ.சா.1 கர்ப்பம் ஆகிவிட்டார். அது குறித்து எனது தங்கை என்னிடம் கூறினார். ஆகவே நாங்கள் அது சம்பந்தமாக காவல்துறையில் புகார் கொடுத்தோம். வழக்கு சம்பந்தமாக 07.08.2023 ஆம் தேதி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.CC- 291/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | கலைவாணன் | Prosecution | LW-4 as PW -3 |
| Husband Name | குஞ்சி | Defence | |
| Village | மணிகிராமம் | Taluk | |
| Calling | | Age | 53/2025 |

**Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day**
19.06.2025. **எதிரி ஆஜர்**
**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**
**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய தங்கை, அ.சா.2 என்னுடைய அக்கா ஆவார். அ.சா.1 மேலையூரில் உள்ள டைலர் கடைக்கு வேலைக்கு சென்று வருவார் அப்போது. அ.சா.1க்கும் எதிரிக்கும் ஏற்பட்ட பழக்கத்தினால் அவர் கற்பமான விசயத்தை எங்களிடம் கூறினார். நாங்கள் ஊர் பஞ்சாயத்தார் முன்னிலையில் அனைத்து மகளிர் காவல் நிலையம் சீர்காழியில் இது சம்மந்தமாக புகார் கொடுத்தோம். போலிசார் எங்களை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.CC- 291/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | இளையராஜா | Prosecution | LW-5 as PW -4 |
| Husband Name | மணி | Defence | |
| Village | மணிகிராம் | Taluk | |
| Calling | | Age | 32/2025 |

**Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day**
19.06.2025. **எதிரி ஆஜர்**
**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**
**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 7.8.23 ஆம் தேதி பகல் 3.00 மணியளவில் அனைத்து மகளீர் காவல் நிலைய போலிசார் மணிகிராமத்தில் உள்ள கண்ணகி என்பரின் வீட்டில் விசாரணை செய்து படம் வரைந்துகொண்டார்கள் அதற்கு சாட்சியாக என்னிடம் கையெழுத்து கேட்டார்கள் நானும் ராஜகோபால் என்பரும் கையெழுத்து செய்துகொடுத்தோம் நீதிமன்றத்தில் தற்போது என்னிடத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். (**அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்துக்கொள்ளப்படுகிறது.